முருகப்பெருமான் துணை

**மகான் குறும்பைச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

28.10.2022, வெள்ளிக்கிழமை

1. தடைகளை வென்று மீட்கும்
தவபலம் கொண்ட ஞானியாக
படைவீடு ஆறுமுகனுக்குக் கொண்ட
பரமானந்த ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தேசமெங்கும் பாதுகாப்பு பெருக
ஆசிதந்து குறும்பைச்சித்தர் யானும்
அனுகூல ஆசிதனை சுபகிருது துலைதிங்கள்
3. திங்களிலே லாப திகதி புகர் வாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 11 ம் நாள் 28.10.2022, வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் அரங்கன் ஞானவழி
ஓங்காரம்பாடி உலகம்வர உரைப்பேன்
ஓங்கார குடில் படைத்து அருளும்
4. அருளும் அரங்கன் ஞானவழி
ஆறுமுகனை அடையும் உயர்வழி
அருளும் அரங்கன் அன்னதானம்
ஆயுள் கீர்த்தி கரும வினை வெல்லும்
5. வெல்லும் உயர்வழி ஆகும்
வேலவா முருகா என வேண்டி
வல்லமைபட வேண்டி வர
வணங்கி அரங்கன் நாம செபம்
6. செபமும் போற்றித் தொடர
சித்திதரும் சடாட்சர தீட்சை
அபயமென ஏற்று வருகவே
ஆபத்து இடைகண்டம் யாவும் விலகும்
7. விலகுமே சத்ருருண ரோகமும்
வினை வெல்லும் பலமும் கூடி
கலகம் மாச்சர்யம் ஏதும் பற்றா
கண்ணியமிக்க வாழ்வாகவே மாறும்
8. மாறுதலை தந்து இனிதே
மக்களை தேற்றும் சக்தி
ஆறுமுகனை காணவழிகாட்டும்
அரங்கன் தொடர்பை கொண்ட மக்கள்
9. மக்களெல்லாம் சைவநெறி ஏற்று
மாதருமம் செய்து வருகவே
ஆக்கைநலம் மனபலம் கூடி
ஆன்மபலமும் கூடி ஞானிகளாக

10. ஆகவே மாற்றம் கண்டுமே
அனைவரும் உலகை மாற்றும்
வகை அறிந்த மக்களாக
வடிவேலன் ஆசிபெற்றவர்களாக

11. ஆகவே நிலைகள் உயர்ந்து
அகிலத்தில் ஆறுமுகன் தலைமை
மிகைபட ஏற்ற மக்களாக
முழுமைபடவே ஞான ஆட்சித் தருவர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–